# முத்தாயம்மாள் நினைவு கல்லூரியில் உலக மாணவர் தின உறுதிமொழி

இராசிபுரம் - காக்காவேரி - முத்தாயம்மாள் நினைவு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இந்திய நாட்டின் முன்னாள் குடியரசுத் தலைவர் 'பாரதரத்னா' டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 'உலக மாணவர் தினம்' மற்றும் 'மாணவர் எழுச்சி தினம்' 15.10.16 அன்று கல்லூரி வளாகத்தில் கொண்டாடப்பட்டது.

கல்லூரியின் இளைஞர் செஞ்சிலுவை சங்கம் மற்றும் செஞ்சுருள் சங்கம் ஆகியவற்றின் சார்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு கல்லூரித் தலைவர் திரு. ஆர். ராமசாமி தலைமை தாங்கினார். பொருளாளர் திரு. ஆர். பிரேம்குமார் மற்றும் முதல்வர் முனைவர் எம். ஆர். லட்சுமி நாராயணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் மாணவ, மாணவியர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

சாதி, இனம், மதம், வட்டாரம் மற்றும் மொழி பாகுபாடு ஏதுமின்றி ஏழை, பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என வித்தியாசமின்றி அனைவரிடமும் சுமூகமான உறவை ஏற்படுத்திக்கொள்வேன். விவசாயம், கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றின் மேம்பாட்டிற்காகவும், மருத்துவம் மற்றும் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி அனைத்து மக்களுக்கும் பயன்பட வேண்டும் என்ற நோக்கத்தில் செயலாற்றுவேன் என கல்லூரி மாணவ, மாணவிகள் உறுதிமொழி மேற்கொண்டனர்.

இந்நிகழ்வில் துறைத்தலைவர்கள், உதவிப்பேராசிரியர்கள், உதவிபேராசிரியைகள், அலுவலகப் பணியாளர்கள் உட்பட 200-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

இதற்கான ஏற்பாட்டினை கல்லூரி உடற்கல்வி இயக்குநர் திரு. பி. சண்முகம் செய்திருந்தார்.

Nmlammeran 15.10.16

முதல்வர்
முத்தாயம்மாள் நினைவு
கலை மற்றும் அறிவியல் கல்லூரி
காக்காவேரி, இராசிபுரம் – 637 408.
நாமக்கல் மாவட்டம்.